# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

# DURGAPURAM MAGALIR ILLAM

தெல்லிப்பழை (இலங்கை) TELLIPPALAI (SRI LANKA)

2007

உ

துர்க்காதேவி துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை




பதிவு இல **J/ 3/ 84 - 23-09-1988**

## இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு விழா

## (வெள்ளி விழா)

# சிறப்பு மலர்

வெளியீடு:

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

**10-03-2007**

உ

# சமர்ப்பணம்

அன்னை துர்க்காதேவியின் அருள் நிழலில் இயங்கி வரும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகித் தொடர்ந்து இயங்கி வருவதற்கு பேராதரவு வழங்கி வரும் கருணை உள்ளங் கொண்ட தர்மசீலர்கள் அனைவர் சார்பிலும் இச்சிறப்பு மலரை துர்க்கை அம்பாள் திருவடிகளில் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** J.P
நிர்வாகசபைத் தலைவர்

**துர்க்காபுரம் மகளிர் இல்லம்,**
**தெல்லிப்பழை.**
10-03-2007.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை (இலங்கை)





# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

# தெல்லிப்பழை

# 2007

**நிர்வாகசபை :**

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்கள் - தலைவர்
திரு சி. அருளானந்தசிவம் - உபதலைவர்
திரு ச. ஆறுமுகநாதன் - உபதலைவர்
Dr. தி. திவாகரன் - பொதுச்செயலாளர்
திரு நா. தவநாதன் - இணைச்செயலாளர்
திரு ஆறு. திருமுருகன் B.A - இணைச்செயலாளர்
திரு அ. சண்முகநாதன் - பொருளாளர்
திரு சு. ஏழூர்நாயகம் - உப பொருளாளர்
திரு ந. செல்வநாயகம்
திரு மு. அருளையா
திரு ச. விநாயகரத்தினம்
திரு ச. கந்தையா
திரு நா. தவமணிநாயகம்
திரு சு. முருகையா
திருமதி கலாதேவி பொன்னம்பலம் M.A
Dr. செ. சபாநடேசன்
திரு நா. சிவநாதன் (இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி)
திரு சி. புஸ்பநாதன் (கொழும்புப் பிரதிநிதி)

உ

# இல்லக்கீதம்

## பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று – வாழிய

## அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லி யூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் – வாழிய

## சரணம்

ஒழுக்கம் உயர்பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்ற மேலோர் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற – வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக் கூடக் கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டு மிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும் – வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க – வாழிய

உ



# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## வெள்ளிவிழாக் காண்பதை முன்னிட்ட

# முன்னுரை

இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு கண்ட துர்க்காபுரம் மகளிர் இல்ல வெள்ளிவிழா மலருக்கு முன்னுரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**"எங்கெங்கு காணிலும் சக்தியடா**
**ஏழு கடல் அவள் வண்ணமடா"**

இந்த புதுமைக் கவிக்கு நாங்கள் தலை வணங்காமல் இருக்க முடியாது. தெல்லிப்பழையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் துர்க்காதேவியின் அரவணைப்பிலே நாங்களும் இல்லப் பிள்ளைகளும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். வழிபாட்டுக்குக் குறைவில்லை, உணவுக்குக் குறைவில்லை, செல்வத்துக்கு குறைவில்லை, கல்விக்குக் குறைவில்லை, சிறந்த பொழுதுபோக்குக்கு குறைவில்லை. எல்லாம் அந்த அன்னை எங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறாள். திக்கற்ற பெண் குழந்தைகளை வளர்த்துக் கல்வி கற்பித்து திருப்தி காணலாம் என்ற எண்ணம் கால் நூற்றாண்டுக்கு மேல் ஆலய பரிபாலன சபைக்கு ஏற்பட்டது. இந்தக் கருத்தை பத்திரிகைகள் மூலமும், வானொலி மூலமும்வெளிப்படுத்தியிருந்தோம். நல்ல வரவேற்பு எமது மண்ணில் மாத்திரம் அல்ல தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் எமக்குக் கிடைத்தது. ஒன்பது பிள்ளைகளுடன் சிறிய குடிசை ஒன்றில் இப் பணியை ஆரம்பித்தோம். 03-02-1982 இல் ஆரம்பமான மகளிர் இல்லம் இன்று விருட்சமாக இந்த மண்ணில் நிழல் பரப்பி நிற்கிறது. நல்ல உள்ளங்கள் ஒன்று சேர்ந்து இந்தப் பணிக்கு ஆதரவு வழங்கி வருகின்றார்கள். ஆகவே வெள்ளிவிழாக் காணும் புண்ணியமும் எமக்குக் கிடைத்திருக்கிறது. வளர்ந்து வளர்ந்து பொன்விழா, வைரவிழா, முத்துவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றை படிப்படியாகக் கண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் உயர்வடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

பிரதம குருக்கள்

# சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

எல்லாம் வல்ல ஆதி சக்தியாம் ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளோடு அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் இல்லம் பெரு விருட்சமாக வளர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெற்று வெள்ளிவிழா காண்பதை இட்டு எமது தேவஸ்தானம் பெருமிதம் அடைகிறது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட ஆதரவற்ற தாய் தந்தையரை இழந்த சிறுமிகளை வளர்த்து சமூகத்தில் நற்பிரஜையாக வாழ வைத்த பெருமை எமது அம்மாவையே சாரும்.

ஆலயப்பணி, அலுவலகப்பணி, அச்சகப்பணி, நூலகப்பணி, சரியைப்பணி, கோசாலைப்பணி, என்று எல்லாவற்றையும் எங்கள் பிள்ளைகள் நல்ல முறையில் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழகம், நுண்கலைப்பிரிவு, என்பனவற்றிற் பெற்ற கல்வியின் பயனாக சமயப்போட்டி, சங்கீதப்போட்டி, கட்டுரைப்போட்டி, விளையாட்டுப்போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற எல்லாப் போட்டிகளிலும் தெரிவாகி பல பதங்கங்களையும், பரிசில்களையும் பெற்று சிறந்த மாணவிகளாக திகழ்கின்றார்கள்.

வளர்ந்த பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று உயர் பதவிகளில் பணியாற்றுகிறார்கள். சிலர் திருமணமாகி உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

வெள்ளிவிழாக் காணும் எமது பிள்ளைகள் மென் மேலும் உயர்ச்சியடைந்து எமக்கும் எமது தேவஸ்தானத்திற்கும் அம்மாவிற்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித் தந்து வாழ அம்பிகையின் திருவருளோடு எமது நல்லாசிகள் உரித்தாகுக.

**லோகா, சமஸ்தா, சுகினோ, பவந்து.**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள்**
**பிரதமகுரு**

உ

## மாவையாதீனகர்த்தா
## மஹாராஜஸ்ரீ ஸ.து. ஷண்முகநாதக்குருக்கள்
வழங்கிய

# வாழ்த்துரை

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை வெள்ளிவிழாவாகக் கொண்டாட திருவருளும் கூடிநிற்கிறது. சைவ சமய அனுஷ்டானங்களிலும் தெய்வீக நிகழ்வுகளின் ஈடுபாடுகளிலும் மகளிரது சம்பந்தம், அவர்களது இணைவு, தரிசனம் என்றெல்லாமிருக்கும் அநுசரணைகட்கு சக்தியூட்டும். சாதனையாளர்களாக மகளிர் வளர வேண்டுமென்பது ஆகமவாக்கு. ஆதியில் யாகங்களில் கூட மகளிரது கடமைகள் முதன்மை பெற்றிருந்தது. கிருஹஸ்தாச்சிரம தர்ம வாழ்விலும் மகளிரது மேன்மைமிகு செயற்பாடுகள்தான் தர்மங்களாக விரிவு கொள்கின்றது. வேத காலங்களில் ஆச்சிரமிகளாக ரிஷிகளின் கண்காணிப்பில் பர்ணசாலைகளில் வாழ்ந்துயர்ந்து விளங்கிய கார்க்கி, ஜபாலா, வருணபிரகாசா, வாசக்கினி, மைத்ரேயி ஆகியோர் யாகங்களில் கூட அக்ரஸ்தானம் பெற்று உலகை உய்வித்த வரலாறுண்டு. காவ்ய காலத்தில் நடமாடிய திரௌபதி, வாலியின் மனைவி தாரா, குந்தி, கைகேயி, காந்தாரி, சத்தியவதி, அகல்யா, கங்கா, மண்டோதரி என்போர் மகளிர் இலட்சணங்களோடு அவரவர்கட்குரிய பண்புகளையும், குணங்களையும் தர்மசாதன வழியில் ஈடுபடுத்தி உலகை உய்வித்தனர். "இவை சாதனையாளர்களாக வாழ அவர்களது இளமைக்கால கல்விச்சூழல்கள் உதவினின்றன" என 'ரோகன் ஜயதிலாகா' என்ற பேராசான் தனது நூலில் குறிப்பிடுகிறார். அத்தோடு மக்களும் அவர்கள் போன்ற சத்ய சீலர்களாக வாழ வேண்டுமெனவும் வலியுறுத்துகிறார்.

உலகின் மேன்மைக்கும் தெய்வீகத் திருவருட் திறனுக்கும், வாழ்வின் உயிரோட்டத்திற்கும், மகளிரது சேவைகளும், அவர்களது திருத்தொண்டுகளும், பிரபஞ்சத்தில் நிகழும் தர்மங்களில் அவர்களது ஈடுபாடும் பெருந்துணையாக அமையுமென வியாசரே முன்னுரை கூறியுள்ளார். மகளிர் மகளிரைப் போன்று வாழ வேண்டும். அதற்குரிய இடம், காலம், சூழல் என்பன ஓர் தெய்வீக மணங்கமழும் இடமாகவே அமைய வேண்டும். அத்தகைய ஓர் இடம்

துர்க்காபுரம் என்பது அசைக்கமுடியாத உண்மையாகும். உலகமே இதனை ஊர்ஜிதப்படுத்துகின்றது.

துர்க்காபுரமும், அதனைச் சார்ந்த மகளிர் இல்லம் உட்பட அனைத்து பொக்கிஷ ஸ்தாபனங்களும், நன்றாகவே இனிது வளர வேண்டுமென யான் தினமும் பிரார்த்திக்கின்றேன். துர்க்காபுரம் மகளிர் இல்லம், துர்க்கையம்பாள் திருஷ்டியிலேயே வளர்கின்றது. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது நெறிப்படுத்தலில் இனிதே வளர்ந்து நற்தொண்டுகளது உயர்வுக்கு வித்திடுகிறது. மகளிர் இல்லம் நன்றாக வாழ்ந்து வளர வேண்டுமென யானும் வாழ்த்தி ஆற்றுப்படுத்துகின்றேன்.

இந்த நூற்றாண்டுகளில் சைவத் தமிழர்கட்கு கிடைத்த இந்த அரிய பொக்கிஷம் ரக்ஷிக்கப்பட்டு உன்னத ஸ்தானத்தில் எழுந்து உலகை உய்விக்க உதவிவிட வேண்டுமென துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு அனைவரும் ஆசிகள் கூறி வாழ்த்தி வணங்கி ஆற்றுப்படுத்துவதும் அவசியமாகின்றது.

எல்லாம் வல்ல இறைவனது அருளாசியும் இவ் மகளிர் இல்லத்திற்கு கிடைக்க வேண்டுமென யானும் வாழ்த்தி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

மாவிட்டபுரம். **மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்.**
29-01-2007. மாவையாதீனகர்த்தா - பிரதமகுரு.

உ

யாழ்ப்பாணம்

# நல்லை ஆதின குரு முதல்வர்

## இரண்டாவது குரு மகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

வழங்கிய

# ஆசிச்செய்தி

அன்புசால் பெருந்தகையீர்,

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயக் கட்டமைப்பில் பல அறப் பணிகளின் வரிசையில் இந் நாட்டில் சைவத் தமிழ்ப் பிள்ளைகள் அநாதைகளாக வாழக் கூடாது என்பதற்காக அதனை செயற்படுத்தும் முகமாக துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு இன்று இருபத்தைந்தாவது வெள்ளிவிழாவை கொண்டாடுவது அனைத்து சைவத்தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. மகளிர் இல்லத்தில் வளரும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் நிறைவான கல்வி, ஒழுக்கம், சமயப்பற்று, சமுதாயச் சிந்தனை அனைத்தையும் நிறைவாக கொண்டு வாழுகின்ற பிள்ளைகளை உருவாக்கி தந்து கொண்டுள்ளது இவ் மகளிர் இல்லம். இல்லத்தில் வாழும் பிள்ளைகள் அனைவரும் பல கலைகளில் உயர் கல்வியை பல்கலைக்கழகம் வரை கற்று உயர்வான பிள்ளைகளாக வளர்ந்துள்ளமை போற்றுதற்குரியது. இப் பணியை "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்றேன்" எனும் வாசகத்தைக் கொண்டு அயராது பணியாற்றி வரும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நிறைவான பணியே இவ் வளர்ச்சிக்கு காரணம். அம்மாவின் பணியின் ஊடாக இந்நாட்டின் தர்மப்பணி சிறப்பாக நடைபெறுவது எல்லோர்க்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. இருபத்தைந்து வருடங்கள் இப்பணியை சிறப்பாக செய்த அனைத்து அன்புள்ளங்களையும் வாழ்த்துகின்றோம். இப்பணி பல்லாண்டு காலம் வளர இறைவனை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

உ

## அகில இலங்கை இந்து மாமன்றம்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவையே மகேசன் பூசை. மக்களுக்குச் செய்யும் பணியின் ஊடாக இறைவனைத் தரிசிக்கலாம். நமது நாட்டில் ஆலயத்துடன் இணைந்த வகையிலான சமுதாயப் பணிகளை முன்னுதாரணமாகச் செயற்படுத்துகின்ற ஆலயமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்குகிறது. ஆலய அறப்பணிகளை சமுதாயத்தின் பல்வேறு துறைகளோடு இணைத்து ஆற்றுகின்ற தனித்துவமான சிறப்பை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் ஆலயத்தின் பெரும் பணிகளுள் ஒரு மகுடமாக துர்க்காபுரம் மகளிர் இல்லம் விளங்குகிறது என்று சொல்லலாம். ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்காக 1982ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் இல்லம் தனது சிறப்பான பணியில் இருபத்தைந்து வருடங்கள் நிறைவு செய்து கொள்ளுவதன் ஊடாக வெள்ளி விழா காண்கிறது என்பது இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகும். ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைத்து, சமுதாயம் போற்றி மதிக்கும் வகையில் அவர்களை வாழவைப்பதில் மகளிர் இல்லம் பெரும் வெற்றி கண்டுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது நீண்டகால சிறப்பான சேவையின் வெளிப்பாடாக துர்க்காபுரம் மகளிர் இல்லத்தையும் குறிப்பிட வேண்டும். இறைவனின் பெயரால் கருணைமிகு ஜீவகாருண்ணியப் பணிகளை ஆற்றவேண்டும் என்ற அன்னையின் உயர்ந்த கொள்கையும், விருப்பமும் இன்று வெற்றிகரமான பாதையில் வளர்ந்து வந்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

அண்மையில் அகவை எண்பத்திரண்டை நிறைவு செய்துள்ள தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர் என்ற வகையிலும், மாமன்றத்துடன் அவர் வைத்திருக்கும் நீண்ட கால நெருங்கிய உறவின் காரணமாகவும், அன்னை அவர்களது தீவிரமான சமய, சமூகநலப் பணிகளுக்காக மாமன்றம் அவரைப் போற்றிப் பாராட்டுகின்றது.

வெள்ளி விழாக் காணும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் சேவைகள் மேலும் சிறப்பாகத் தொடர வேண்டும் என மாமன்றத்தின் சார்பில் இதய பூர்வமாக வாழ்த்துகிறோம்.

**கந்தையா நீலகண்டன்**
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

பணிப்பாளர், ஊடகவளங்கள் துறை

## பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

துர்க்காதேவியின் நேரடி அருட்பார்வையிலே வளர்ந்துவரும் மகளிர் இல்லம் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் கொண்டாடுகின்றது. அருட்கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் இந்த மகளிர் இல்லத்தை அமைத்துப் பொறுப்பாள்கை செய்தவந்தமை கோயில் பரிபாலனத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. கோயில் பரிபாலனம் என்பது கட்டிடம் அமைத்தல், புனருத்தாரணம் செய்தல், குடமுழுக்குச் செய்தல், நாட்பூசை - சிறப்பு நாட்பூசை திருவிழா முதலியனவற்றை நடத்தல் என்பனவாகவே இருந்தவந்தன. கோயிலும் பெரிய அளவிலே சமூகசேவையும் செய்யலாம் என்பதை அம்மாவினுடை முயற்சி எடுத்துக் காட்டியது.

துர்க்கா துரந்தரியாகிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவளருளுடன் நிறைவாழ்வு பெறவேண்டிய பெண் குழந்தைகளுக்கு நல்ல உணவு, உடை, வாழ்விடம், கல்வி, ஒழுக்கம் முதலியனவற்றை வழங்கும் மகளிர் இல்லத்தை அமைத்துப் பெரியதொரு தொண்டினை ஆற்றியுள்ளார். துர்க்காபுரம் மகளிர் இல்லம் பல சாதனைகளைச் செய்துள்ளது. இந்த இல்லத்திலே வாழ்ந்து இடைநிலைக் கல்வியினை நிறைவுசெய்து பல்கலைக் கழகத்திலே கற்று பட்டதாரிகளாகப் பல பிள்ளைகள் ஆகியுள்ளனர். அன்னையின் வளர்ப்பு அப்பிள்ளைகளிலே காணமுடிகிறது. அவர்களுட் சிலர் பல்கலைக் கழகத்திலே என்னிடம் கல்விகற்றுள்ளனர். இதனாலே இவர்களை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் பாடசாலை, கோட்ட, மாவட்ட, மாகாண மட்டத்திலே பல பரிசு பெற்றுள்ளனர். மாலை கட்டுதல், பண்ணிசை பாடுதல் முதலாய கோயிற் பணிகளைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் அவர்கள் செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இப்பிள்ளைகளின் சாதனைகளிலே மகிழ்வும் பெருமையும் அடையும் அம்மாவும் அவர் தலைமையிலே இயங்கும் அறங்காவல் சபையினரும் எங்கள் எல்லோருக்கும் எடுத்துக்காட்டுகளாயுள்ளனர்.

வெள்ளிவிழாக்காணும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்னும் பெருந் தொகையான பிள்ளைகளுக்கு நிறைவாழ்வு நல்கி மேலும் பல சிறப்புக்கள் பெறவும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் சிறப்புக்கள் மேலோங்கவும் தெல்லிநகர் துர்க்காதேவியின் இன்னருள் பாலிக்கவேண்டுமென வேண்டி இவ்வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்.**

உ

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
தமிழ்த்துறை தலைவர்

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா** அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துப்பா

## உவந்தனம் வாழி நீடூழி

துர்க்கா புரம்திகழும் தூயமகளிர் இல்லம்
எக்காலமும் சிறந்து இன்புடனே - மிக்கபுகழ்
பெற்று விளங்கும் பெரும்பேறு கண்டின்று
உற்றேன் மகிழ்ச்சி மனத் துள்ளே

ஆலெனப் படர்ந்து அறுகெனத் தொடர்ந்து
அளப்பரும் பணிகளால் உயர்ந்த
சீலமாம் விருட்சம் எனச் செழிக்கின்ற
செல்விதங் கம்மாவின் எண்ணக்
கோலத்தில் உதித்துக் குளிர்தரு நிழலாய்
குவலயம் மகிழ்ந்திட நிமிரும்
தாலமாம் மகளிர் தனிப்பெரும் நிலையம்
தழைத்திட வாழ்த்துவம் நாமே.

ஊரினைத் தங்கள் உறவினை இன்னும்
உதவிகள் பலதையும் கொடிய
போரினால் இழந்து போக்கிடம் இன்றிப்
புலம்பிய உள்ளங்களைத் தேடிச்
சீரினைச் செய்து சிறப்புடன் வாழச்
சேர்த்தொன்றாய் இல்லமொன் றமைத்து
காரியம் கண்டு கண்ணிநீர் பனிக்கக்
கரங்களைக் கூப்பினோம் வாழ்க.

பெண்மையைத் தெய்வக் கோலத்திற் காணும்
பெருமையெம் வாழ்வியல் என்னும்
உண்மையை உலகம் அறிந்திடச் செய்த
உத்தமி தங்கம்மா என்றும்
வண்மையை நல்ல வாய்மையை வளர்த்து
வாழ்ந்திட மகளிர்க்கோ ரில்லம்
திண்மையாய் நிறுவித் திறம்பட நடாத்தும்
தெய்விகம் கண்டுநாம் மகிழ்ந்தோம்.

அறநெறி அன்பு ஆசாரம் ஒழுக்கம்
அனைத்தையும் அழகுறப் பேணிப்
பெறலரும் பேற்றை பெண்மை பெற்றிடவே
பெருமன தோடொரு இல்லம்
நிறுவிய துர்க்கா துரந்தரி உந்தன்
நினைவுகள் அன்பர்தம் மனத்தே
உறுபொருளாகி உய்தியைப் பயக்கும்
உண்மையைக் கண்டுநாம் வியந்தோம்.

வெள்ளி விழாவைக் கண்டின் றுயரும்
விருட்சமாம் மகளிரின் இல்லம்
தெள்ளிய நிலவாய்த் தெல்லியம் பதியில்
தேசுற விளங்கியே அன்பை
அள்ளியே வழங்கி ஆதரவளிக்க
அன்னையாம் தங்கம்மா நெஞ்சில்
உள்ளிய நினைவால் உயர்ந்தது பெண்மை
உவந்தனம் வாழி நீடூழி.

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**

உ

## 21 ஆண்டுகள் இல்லத்திலே தங்கியிருந்து பணியாற்றும்

## செல்வி காமாட்சி . கந்தையா அவர்களின்

# கருத்துரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்கு மக்களின் மேம்பாட்டிக்கு இன்றியமையாத ஒரு கூற்றாகும். கல்வி, ஒழுக்கம், அன்பு, அறம் மக்கள் வாழ்வை வளம் படுத்துவனவாகும். தெய்வ பக்தி மூலமே இவையாவும் சிறப்படையும். இதனை நன்குணர்ந்த மக்கள் கூட்டம் அருளோங்கு நிலையில் உள்ள திருத்தலங்களுக்குத் திரண்டு வருகின்றனர். இந்த வகையில் துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் கோயில் கொண்டிருக்கும் துர்க்கை அம்பாள் தன் அருட்பார்வையால் அடியார் கூட்டத்தை தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறார். நேர்த்திக்கடன், அன்பளிப்பு, அர்ச்சனைகளால் நிதி வளம் பெருகுகின்றது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கோட்பாட்டினராகிய நிர்வாகித்தினர் இந்நிதி வளத்தின் முதற்சேவையாக துர்க்காபுரம்மகளிர் இல்லத்தை ஆரம்பித்தனர். கருவிலே திருவுடையவராக அவதரித்த குழந்தைகளில் பலர் இவ்வில்லத்தில் வந்து சேர்ந்தனர். பெற்றோரை இழந்த ஆறு வயதிற்கும் ஒன்பது வயதிற்கும் இடைப்பட்ட பெண் குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்க்கப் படுகின்றனர். உணவு, உடை, இருப்பிட வசதியுடன் கல்வியில் மேம்படுத்தி இவர்களின் எதிர் காலத்திற்கு ஒளியூட்டுவதே இந்த இல்லத்தின் நோக்கமாகும்.

இவர்கள் அன்புடனும் பண்புடனும் மேற்பார்வை செய்து சேவையாற்ற மேற்பார்வையாளர்கள் தேவைப் பட்டனர். நேர்முகப் பரீட்சை செய்து தகுந்த முறையில் தெரிவு செய்யப்பட்டனர். அரச சேவையை எதிர்பார்த்து எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என யாழ்ப்பாணம் கல்விக்கந்தோர் முதல் கொழும்பு கல்விக் கந்தோர் வரை சென்று வந்த எனக்கு மகோன்னத சேவை இங்கே உண்டு என அம்பாள் தன் அருட்பார்வையாலும் அபய கரத்தாலும் அணைத்தாற் போல நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப் பட்டேன். 1985ஆம் ஆண்டு முதல் இப்பணியே என் பணி எனக் கொண்டு சேவையாற்றிவருகின்றேன். ஆறுவயதில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்த பச்சிளங் குழந்தைகள் சிவத்தமிழ் செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் சமயவகுப்பு, நற்சிந்தனை, கூட்டுவழிபாடுகளில் கலந்து இறைபக்தி மிகுந்தவர்களாக வளர்ந்தனர். அரச பாடசாலைகளில் கல்வி கற்றனர் கல்வியிலும் கலைகளிலும் சுடர் விட்டுப் பிரகாசித்தனர்.

சமயம், தமிழ், பண்ணிசை, பேச்சு கட்டுரை மற்றும் விளையாட்டுக்களில் முதலாம் இடம் பெற்று முன்னணியில் நிற்பர். உண்ண உணவு, உடுக்க உடை, கல்வி கற்கப் பாடசாலை சென்று வருவதுடன் தமது எதிர்காலத்தை குடும்ப வாழ்க்கையில் சிறப்பாக வாழ வாழ்கைக்கு வேண்டிய அத்தனை சிறப்புக்களையும் இங்கேயே பெற்றுக் கொண்டனர். தாம் வாழும் இல்லங்களையும் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக்குவர். பூந்தோட்டம் அமைத்து முற்றத்தை அழகு படுத்துவதுடன் சமயற் கூடத்திலும் தம் கவனத்தை செலுத்தினர். தேனீர் தயாரித்தல் முதல் காலை, மதியம், இரவுச் சாப்பாட்டை தெரிவு செய்தல். சாப்பாடு தயாரிக்க உதவுதல் போன்ற பங்களிப்பையும் செய்து வந்தனர். மோர், மிளகாய், பன்னவேலை, உடைதயாரிப்பதிலும் கவனம் செலுத்தினர். விழாக்கள், பண்டிகைகள், மகோற்சவ காலங்களிலும் கோலம் போடுதல், மாலைகட்டுதல் மற்றும் அன்ன தானத்தில் உணவு பரிமாறுதலில் சிறந்து விளங்கினர்.

கோயில் கூட்டுதல், கழுவுதல் மற்றும் சரியைத் தொண்டினை நிறைவேற்றினர். தமது நல்ல வளர்ச்சிக்கும் நாட்டின் சமாதானத்திற்குமாக காலையில் திருவீதி வலம் வந்து கோளறு பதிகம், சிவபுராணம், திருஅங்கமாலை, திருவெம்பாவை காலத்திற்கு ஏற்ற வகையில் படித்து கூட்டுப் பிரார்த்தனையும் செய்தனர். மகோற்சவ கால வழிபாடு அம்பாள் சந்நிதியில் மட்டுமல்ல, சுற்றுப்புறக் கோவில்களிலும் பஜனை வழிபாடு செய்தனர். காலை, நண்பகல், இரவு, உணவு உண்ணும் வேளைகளில் தேவாரம், திருவாசகம், புராணம், அபிராமி அந்தாதி படித்து உண்ணும் நற்பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இரவு படுக்கைக்குப் போகும் முன் இரவுப் பிரார்த்தனை செய்யத் தவறமாட்டார்கள். அண்மைக் கோவில்களுக்கு பாதயாத்திரையாகவும் நீண்ட தூரக் கோவில்களான நல்லூர், நயினை நாகபூசனி அம்பாள், வல்லிபுர ஆழ்வார், தில்லை அம்பலப் பிள்ளையார், திருக்கேதிஸ்வரசிவன் கோவில்களுக்கு பேரூந்துகளிற் பஜனை வழிபாட்டுடன் சென்று வருவார்.

ஆறு வயதில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்த இவர்கள் ஆர்வத்துடன் படித்து பல்கலைக்கழகம் சென்றனர். பட்டம் பெற்றனர். அரச உத்தியோகம் கிடைத்தது. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக் குதூகலமாக வாழ்கின்றனர். உயர் கல்வி தொடர முடியாதவர்களும் க.பொ.த உ/தரத்துடன் கோவில், அச்சகம், அறநெறிப்பாடசாலை, நூல்நிலையம், இல்லத்திலும் பணி செய்கின்றனர். இல்லத்தை விட்டு வெளியேறியோர் உள்நாட்டிலும் இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், சுவிஸ், கனடா, போன்ற நாடுகளில் குடும்பமாக வாழ்கின்றனர். தாம் வளர்ந்த இல்லத்துடனும் தம்மை வளர்த்த ஆலயத்துடனும் மேலும் தொடர்பு கொள்கின்றனர்.

பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்று வெளியேறியோர் பிரதேச செயலகம், பாடசாலைகளில் அரச உத்தியோகம் பார்க்கின்றனர். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்தோர் இன்று பல்கலைக்கழகத்திலும். க.பொ.த உ/தரத்திலும், க.பொ.த சா/தரத்திலும் நல்ல முறையில் படித்து வருகின்றனர். பாடசாலை ஊடாக நடந்த போட்டிகளில்

| | | |
|---|---|---|
| புலமைப் பரிசில் சித்தியடைந்தோர் | - | 3 பேர் |
| பெற்றுக் கொண்ட தங்கப்பதக்கம் | - | 15 |
| பெற்றுக் கொண்ட வெண்கலப்பதக்கம் | - | 01 |
| பெற்றுக் கொண்ட வெள்ளிப்பதக்கம் | - | 03 |
| சம்பியன் கப் | - | 15 |

சர்வதேச மட்டத்தில் சிறப்புப் பெறும் வகையில் இல்லம் வளர்ந்து வருவதை ஆண்டு தோறும் வெளிவரும் ஆண்டறிக்கைகள் மூலம் யாவரும் அறியலாம்.

தமது சுற்றம் என்று எவரையும் நாடாது இல்லமும், கோயிலுமே தமது உறவு என்று வாழ்ந்தவர்களும் உண்டு. இவர்கள் கல்வியறிவுடன் வளர்ந்து தேவஸ்தான அலுவலகம், தேவஸ்தான அச்சகத்தில் பணிபுரிகின்றனர். எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி த. தவனேஸ்வரி அவர்கள் படித்து பட்டதாரியாகி இன்று ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இவரும் திருமணமாகி சீரும் சிறப்புமாக குடும்ப சுகத்துடன் வாழ்ந்து வருகின்றார். மேலும் எமது இல்லத்தில் வளர்ந்து இன்று திருமணமாகி அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி உதயகுமார் மஞ்சுளா அவர்களின் திருமணம் தேவஸ்தான அனுசரணையுடன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

இவ்வில்லம் தொடர்ந்தும் நல்ல வளர்ச்சி காண எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் திருவருளை வேண்டி நிற்போமாக.

**"ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"**

**செல்வி க. காமாட்சி**
இல்ல மேற்பார்வையாளர்

உ

## தெல்லிப்பழை

## சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத்தில் வதியும்

## திருமதி இ. சிவமணி அவர்கள்

நான் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டேன். என் பெற்றோர், கணவர், மூன்று அண்ணாமார்கள் அனைவரும் காலமாகிவிட்டார்கள். நான் தனிப்பட்டவள் ஆனேன். நாட்டுப் பிரச்சனையால் எனக்குப் புகலிடம் தந்து பத்து வருடம் சிறப்பாகப் பார்த்தவர்களும் கடைசியில் என்னைக் கைவிட்டு விட்டார்கள். என்ன செய்வது எனத் தெரியாமல் என் உயிரையே முடிக்கும் மனநிலை ஏற்பட்டு விட்டது. பாவமான செயல் என்பது தெரிந்தும் புகலிடம் இல்லாமல் என்னால் எப்படி வாழமுடியும்? என எண்ணினேன். எங்கள் குலதெய்வமாகிய முத்துமாரி அம்பாளிடம் மன்னிக்கும் படி வேண்டி பிரார்த்தனை செய்து கொண்டேன். அம்பாளின் திருவருளினால் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நினைவு வந்தது. அம்மையாரின் சிவசேவைப்பணிகளில் அன்னையர் இல்லம் இருப்பதாக அறிந்தேன்.

அம்மையார் அவர்களிடம் 10.04.2004 இல் இவ்விடம் வந்து, அம்மையார் அவர்களை தரிசித்து அவர்கள் பாதந்தொட்டு வணங்கி எனக்கு புகலிடம் தரும்படி வேண்டி நின்றேன். அம்மையார் அவர்களிடம் நான் வரும்போது எனக்கு எழுபத்தேழு வயது. இந்த நிலமை அறிந்தும் நான் அநாதையாக்கப்பட்டேன் என்ற காரணத்தினால் அவர்களுக்கு இயல்பாகவே உள்ள கருணை உள்ளத்துடன் என்னை உடனே ஏற்றுக் கொண்டார்கள். துர்க்கை அம்பாளின் திருவருளினால் அம்பாளின் அருட்பணிக்கே தன்னை அர்ப்பணித்து அருந்தொண்டு ஆற்றி வருகின்ற தெய்வத் தாயாகியஅம்மையார் அவர்களின் கருணை உள்ளத்தினாலும் நான் பாவச் செயலில் இருந்து காப்பாற்றப் பட்டேன். அம்மையார் அவர்களின் அன்பான அனுமதியுடன் நான் இந்த அன்னையர் இல்லத்தில் 10.04.2004இல் சேர்க்கப்பட்டேன். துர்க்கை அம்பாளையும், அம்மையார் அவர்களையும் தெய்வமாகவே நினைத்து நித்தமும் அவர்கள் பாதம் மனத்தால் வணங்கி வருகின்றேன். தர்மநெறி தவறாது பாகுபாடு எதுவும் பாராது எனக்கு தக்க தருணத்தில் உதவி புரிந்த நன்றியை

என்றும் மறக்க மாட்டேன். நான் இந்த இல்லத்திற்கு வந்த அன்றே இவ்விடம் நடைபெறுகின்ற தெய்வீகச் சூழ்நிலையும், ஒவ்வொரு இல்லங்களிலும் கடமை உணர்வுடன் செயற்படும் சிறப்புக்களையும் கண்ணால் கண்டும் கேட்டும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இந்த புனிதமான இடம் எனக்குக் கிடைத்திருப்பது பெரும்பேறு என எண்ணி மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைந்தேன். முன்பு நான் இருந்த சுகபோக வாழ்கையிலும் பார்க்க இந்த அன்னையர் இல்லம் எனக்கு மிக உயர்ந்த இடமாகவும், சிறப்பான இடமாகவும் கிடைத்திருக்கிறது என எண்ணி மகிழ்ச்சியும், அமைதியும் அடைகின்றேன். அன்று என் உறவினரால் தள்ளாத வயதில் நான் கைவிடப்பட்டேன். இந்த உண்மை நிலமை துர்க்கை அம்பாளின் அருள் பெற்றவரும் அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் பெற்றவரும், தர்மநெறி தவறாது வாழ்பவரும், அறப்பணிகளை சிறப்புடன் செய்பவரும், உலகம் போற்றும் உத்தமத் தாயாகிய எங்கள் அம்மையார் எனக்கு எவ்வளவோ வசதிகளையும் செய்து தந்து எவ்விதக் குறையும் இல்லாமல் நல்ல முறையில் பாதுகாத்து வருகின்றார்கள். அத்துடன் மகளிர் இல்லப் பிள்ளைகளும் தக்க சமயத்தில் எமக்கு உதவி புரிகின்றார்கள். சின்னஞ்சிறு பிள்ளைகளும் என் அருகில் வந்து "பாட்டி பாட்டி" என்று அழைத்துப் பாடுவதும், விளையாடுவதும் கொஞ்சுவதுமாக இருக்கின்றார்கள். அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் அன்பு மொழி கேட்டு என் அங்கமெல்லாம் குளிர்ந்து மனமகிழ்ச்சியுடன் வாழ்கின்றேன்.குசினியில் கடமை புரியும் பிள்ளைகளும் என்னை நல்ல முறையில் கவனித்து, பாதுகாத்து வருகின்றார்கள். எனக்கு நோய்,வருத்தம் என்றால் அம்மையார் முதற் கொண்டு மிஸ் அம்மா, மகளிர் இல்லத் தலைவியார் எல்லா வேலைகளையும் கவனித்து பொறுப் புணர்ச்சியுடன் சேவை செய்து வரும் ஒவ்வொரு பிள்ளையும் எல்லோரும் எனக்கு தக்க வைத்தியம் செய்வித்து, நேரம் தவறாது சாப்பாடு, தண்ணீர் யாவும் தந்து நல்ல முறையில் கவனித்து வருகின்றார்கள். நான் என்னுடைய சொந்த வீட்டில் இருப்பது போலவே இவ்விடம் ஒரு குறையும் இல்லாமல் இருக்கின்றேன். என்னுடன் கூட இருக்கும் அன்புச் சகோதரிகளும் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள்.

மேலும் எங்களுடைய அம்மையார் அவர்கள் சீரிய வாழ்க்கை முறையில் சகல விஷயங்களும் தக்கமுறையில் கட்டுப்பாட்டுடன் நடைபெற்று வருவதால்

பூசை புரியும் அந்தணச் சிவாச்சாரியார் முதலாக, நிர்வாக சபையினர் மற்றும் பல தொண்டர் சபையினர்களும், ஊழியர்களும், அன்னதான வைபவங்களும், திருமண வைபவங்களும், யாவும் பயபக்தியுடன் முறைதவறாது சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன். மேலும் தெல்லிப்பழை வைத்தியசாலையினரும், DR. செ. சபாநடேசன் அவர்களும் எனது தளர்ந்த நிலையில் பெரும் ஆறுதல் காட்டி மருந்து வகைகளைத் தந்து உதவுவதும் அந்த அம்பாளின் அருள்துணையே. அவர்கள் கருணை உள்ளத்துடன் கடமை புரிவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனக்கு இவ்விடம் எவ்வித குறையும் இல்லை. தற்போது எனக்கு எண்பது வயது. இந்த வயதில் எனக்கு அடிக்கடி நோய் ஏற்படுகிறது. அதனால் மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுக்க வேண்டி வந்துவிடுமோ என்ற ஒரு கவலைதான் என்மனதில் இருக்கின்றது. வேறு எந்தக் குறையும், கவலையும் இல்லை. அதற்குப் புகலிடம் தந்த துர்க்கை அம்மை தாயே நீயே எனக்கு என்றும் வழிகாட்டுவாயாக எனப் பிரார்த்தித்து வாழ்கின்றேன். ஆகவே என் வாழ்க்கையில் இந்தப் புனிதமான அன்னையர் இல்லத்தின் வாழ்க்கை எனக்கு எவ்வளவோ நிம்மதியையும், நிறைவையும் தந்து மிக சந்தோஷத்துடன் வாழ முடிகின்றது.

**துர்க்கை அம்பாள் துணை.**

இப்படிக்கு,
அனைவரின் அன்பு ஆதரவையும்
பெற்று வாழும்,
**இ. சிவமணி.**

உ

## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்

# சுவாமி ஆத்மகனானந்தா அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் அமைந்துள்ள துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் வெள்ளி விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அங்குள்ள கோயிலில் குடிகொண்டிருக்கும் அம்மனுக்குச் செய்யும் வழிபாடு இம் மகளிர் இல்லக் குழந்தைகளின் நல் வாழ்க்கையை உருவாக்கும் சேவையாக நிறைவு பெற்றிருப்பது உண்மையில் மகத்தானது எனக் கூறத் தேவையில்லை அல்லவா? இது காலத்தின் தேவையை உணர்ந்து செய்யப்படும் சேவை. இங்கு தங்கியிருந்து கல்வி பயிலும் சிறுமிகள் வெறும் உணவு, உடை போன்ற பௌதிக வசதிகளை மட்டுமன்றி, இறைபக்தியையும், நல்லொழுக்கத்தையும் வளர்த்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பையும், வழிகாட்டுதலையும் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும். இத்தகைய பயிற்சியினால் இச் சிறுமிகள் எதிர்காலத்தில் தாங்கள் வாழும் சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற சேவையை நல்குவார்கள் என எதிர்பார்க்கலாம். சுருங்கக் கூறின் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் இச் சிறுமியர் இல்லம் ஈடுபட்டுள்ளது எனலாம்.

பல சவால்கள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியில் இவ்வில்லத்தைப் பராமரித்து வரும் இவ்வில்ல நிர்வாகிகளை, குறிப்பாக இவ்வில்லத்தின் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை மிகவும் பாராட்டுவதோடு இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் வழங்கி ஆசிர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

இவ்வில்லம் மேலும் சிறப்புடன் இயங்கி, ஏழை மற்றும் அநாதைக் குழந்தைகளுக்கு நல்வாழ்வு வழங்கிட இறைவனை உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**



கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களுடன்
மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவர்கள்.



கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களுடன்
மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள்.

உ

அம்பாள் துணை

## வெள்ளி விழாக்காணும்

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

"படமாடக் கோயில் பரமர்க் கொன்றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க் கங்காகும்
நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க் கங்காமே".

என்பது திருமந்திரப் பாடல். ஏழைகள் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்பது எமது நம்பிக்கையாகும். இந்த வகையில் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளி விழாக் காணும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை நாங்கள் வாழ்த்துகிறோம். இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக விளங்கி வரும் தெல்லிப்பழை துர்க்காதேவியை என்றும் பிரார்த்திக்கின்றோம். அனைவரிடமும் அன்பு காட்டுவதே இறைவனுக்கு உவப்பான பூசையாகும் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டிய ஒரு நல்ல வாய்ப்பு எமக்குக் கிடைத்திருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டே 03-02-1982ல் இவ்வில்லம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு விழாவை வெள்ளி விழாவாகக் கொண்டாடும் ஒரு சந்தர்ப்பத்தை துர்க்கையம்பாள் எமக்குத் தந்துள்ளாள். அன்னையின் அருளாலும் வெளிநாட்டு உள்நாட்டு அன்பர்களின் ஆதரவாலும் இன்று இவ்வில்லம் எழுச்சியையும் வளர்ச்சியையும் பெற்று வெள்ளி விழாவில் காலடி பதித்துள்ளது. நல்லதை நினைத்தோம், நல்லதைப் பேசினோம், நல்லதைச் செய்தோம், என்ற திருப்தி எங்கள் பரிபாலன சபைக்கு ஏற்பட்டுள்ளது. அன்புடனும் சிரத்தையுடனும், இறை நம்பிக்கையுடனும் பணி செய்து சமூகத்தை எழுச்சி பாதையில் இட்டுச் சென்ற எமது நாயன்மார்கள், சமயகுரவர்கள், சைவச் சான்றோர்கள் காட்டிய வழியிலே நாங்களும் இந்தப்பணிக்கு எம்மை அர்ப்பணித்தோம். இதற்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கும் பெருமக்களை இரு கரம் கூப்பி ஏத்துறோம். அவர்கள் வாழ்ந்தால் நாடு வாழும், இனம் வாழும், நாமும் மகிழ்ச்சியுடன் வாழ்வோம் என்பது திண்ணம்.

அல்லலும், அவலமும் அடிக்கடி எமது இனத்தை பாதிப்புக்கு உள்ளாக்கி வருவதனால் பெரிதும் தாக்கப்படுபவர்கள் எமது இளைய தலைமுறையினரே என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. எம்மவரில் ஒரு சில குடும்பங்கள் இருக்க இடமின்றியும், உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், கல்வி கற்க வாய்ப்பின்றியும் கலங்கித் திரிகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இக் குடும்பங்களின் பிள்ளைகளை நேசக்கரம் நீட்டி அணைத்துக் கொள்வது எமது தேவஸ்தானம் போன்ற நிறுவனங்களுக்கு இன்றியமையாத கடமையாகும். துர்க்காதேவி ஆலயத்தின் இரண்டாவது குடமுழுக்கு விழா 1981ல் நிறைவேற்றப்பட்ட பின்பு சமூகப் பணிகளைப் பற்றி ஆலய நிர்வாகம் சிந்தித்து செயலாற்றத் தொடங்கியது. அதற்கு ஏற்ப 03-02-1982ல் ஐந்து வயதுக்கு

மேற்பட்ட ஒன்பது சிறுமிகளுடனும் ஒரு மேற் பார்வையாளருடனும் ஞான சுரபி மண்டபத்தில் இவ்வில்லம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் செல்வி கணபதிப்பிள்ளை இவ்வில்லப் பிள்ளைகளைப் பொறுப்பேற்று வழி நடத்தி வைத்தார். பின்பு திருமதி. தயாளமணி கனகசிங்கம் இல்லப்பிள்ளைகளுக்கு நல்வழி காட்டியாக அமைந்தார். இவர் பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியை. தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்பிக்கும் பொழுதே மகளிர் இல்லப் பணியையும் ஓரளவு நிறைவேற்றினார். ஆண்டு தோறும் இல்லப்பிள்ளைகளின் தொகை அதிகரித்தது. இவர்களில் பெரும்பாலோர் ஆதரவற்ற பெண்பிள்ளைகளாகவே இல்லத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் வளர்ந்து வெளிநாடுகளில் நல்ல குடும்பப் பெண்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மகளிர் இல்லத்துக்கென்று அமைக்கப்பட்ட மாடிக்கட்டடம்**

1985ம் ஆண்டு இக்கட்டடம் ஆலயத்துக்கு தென் கிழக்கு மூலையிலே அமைக்கப்பட்டு 31-01-1986ல் திறந்து வைக்கப்பட்டது. அறுபத்தைந்து பெண்பிள்ளைகள் இல்லத்தில் இடம் பெற்றனர். பாராளுமன்ற உறுப்பினரும் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவருமான அமரர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் மேற்படி கட்டடத்தைத் திறந்து வைத்து பாராட்டுரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. தேவஸ்தான நிர்வாக சபையின் உயர்ந்த நோக்கத்துக்கு ஏற்ப இல்லப்பிள்ளைகள் அறிவு, ஆற்றல், செயற்றிறன், கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக வளர்க்கப்பட்டார்கள். “வைகறையில் துயிலெழு” என்னும் முதுரை நல்வாக்கை இல்லப்பிள்ளைகள் நடைமுறையில் அமைதியுடன் சாதித்து வளர்க்கப்பட்டார்கள். இல்ல உறுப்பினர்கள் ஒழுக்கத்துடன் வளர்ச்சியுறுவதற்கு மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1. திலகவதி இல்லம்
2. மங்கையற்கரசி இல்லம்
3. வாசுகி இல்லம்

**கல்வி**

ஆரம்பத்தில் இல்லப்பிள்ளைகளை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சேர்க்கப்பட்டு கல்வியிலும் கலை நிகழ்ச்சிகளிலும் விளையாட்டிலும் ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொண்டனர்.

**அரசாங்கப் பதிவு**

துர்காபுரம் மகளிர் இல்லம் அரசாங்கச் சட்டத்தின் பிரகாரம் 23-09-1988ல் பதிவு செய்யப்பட்டது. நன்னடத்தைப் பாதுகாவலர் சிறுவர் திணைக்களத்தினால் இப் பதிவு செய்யப்பட்டது. இதன் பிரகாரம் அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனமாக இது விளங்குவது பெருமைக்குரியது. பதிவு இலக்கம் J/ 3/ 84-23-09-1988.

## சமயப் பணிகளும் யாத்திரைகளும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதற்கேற்ப தினமும் காலை மாலை வழிபாடு செய்து நிற்கும் இல்லப்பிள்ளைகள் வீதி சுற்றி கூட்டு வழிபாட்டை காலை 6-30 மணிக்கும் ஆலய உள்வீதி கூட்டு வழிபாட்டை மாலை 5-30 மணிக்கும் படுக்கைக்கு செல்லும் போது ஆற்றும் வழிபாட்டை இரவு 8-30 மணிக்கும் நடாத்தி வருகின்றனர். உணவு உண்ணத் தொடங்கும் போது மூன்று நேரமும் திருமுறை ஓதி உணவு உண்பது வழக்கமாகும். மேலும் ஆலயத்தை தினமும் அலகிடல், கழுவுதல், பூசைத்திரவியச் சுத்தம், பட்டுகள் கழுவப்பட்டு அலங்காரம் செய்தல், மாலை கட்டுதல், கோலம் போடல், திருவிழாக் காலங்களில் பஜனை யாவும் மிகவும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆண்டு தோறும் புனித யாத்திரைகளை மேற்கொள்ளும் ஒழுங்குகளையும் செய்துள்ளோம். திருக்கேதீஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம், வல்லிபுரக்கோவில், பன்றித்தலைச்சி அம்மன் கோவில், வண்ணை வைத்திஸ்வரன் கோவில், கீரிமலைச் சிவன் கோவில் ஆகியவற்றுக்கு விழாக் காலங்களில் யாத்திரை செய்து அருள் அனுபவத்தைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்கிறார்கள். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு ஆண்டு தோறும் தேர்த்திருவிழா அன்று நடை பஜனையாகச் சென்று முருகப் பெருமானை வழிபாடு செய்வது கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

சமயகுரவர் நால்வர் குருபூசைகளையும் ஆறுமுகநாவலர் குருபூசையையும் தேவஸ்தானத்தின் திருமுறை மடத்தில் நடாத்தி இல்லப்பிள்ளைகளே நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து சிறப்பித்து வருகிறார்கள். திருமுறை மடத்தில் வெள்ளிக்கிழமை தோறும் சைவசமய வகுப்பு நடைபெறுகிறது. நாட்டுக்கு அமைதி வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக கூட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது. படுக்கைக்குப் போகும் போது இல்லப்பிள்ளைகள் திரியம்பக மந்திரம் சொல்லி அமைதிக்குப் பிரார்த்திக்கிறார்கள்.

## நிதி நிர்வாகம்

பின்வரும் வங்கிகளில் துர்க்காபுரம் மகளிர் இல்லக் கணக்கு இடம் பெற்றுள்ளது. தனாதிகாரியும் தலைவரும் அல்லது தனாதிகாரியும் செயலாளரும் வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். வங்கிகள் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| இலங்கை வங்கி, சுன்னாகம் | - க/கு இல. 4923 |
| வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | - க/கு இல. 1060012977 |
| இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி | - க/கு இல. 0717043 |

நலன் விரும்பிகள் பலரினால் ஏற்படுத்தப்பட்ட நிரந்தர வைப்பு அறக்கட்டளைகள் மூலம் ஏறக்குறைய வருடம் தோறும் மூன்று இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா (360,000/-) வட்டியாகக் கிடைக்கிறது. இடம் பெயர்ந்த

காலத்தில் எமது பணிக்கு பேருதவியாக அகில இலங்கை இந்து மாமன்றமும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளும் நிதியுதவி வழங்கியமை பாராட்டிற்குரியது. இலண்டன் தமிழ் அநாதைகள் நம்பிக்கை நிதியம் ஆணடு தோறும் குறைந்தது ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு (50,000/-) மேற்பட்ட தொகையை அனுப்பி பேராதரவு வழங்கி வருகிறது.

அவுஸ்ரேலியா "அபயகரம்" நிறுவனம் ஆண்டு தோறும் கதம்ப நிகழ்ச்சிகளை நடாத்தி அதன் மூலம் பெறும் வருமானத்தில் கணிசமான பங்கை எமது இல்லத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கிப் பேராதரவு தருகின்றது. அமெரிக்கத் தமிழர் ஆதார நிறுவனத் தலைவர் DR.N.A. இரஞ்சிதன் அவர்கள் ஆண்டு தோறும் நிதியுதவி வழங்கி வருவது நன்றியோடு நினைவூட்டற்குரியது.

இன்னும் உள்ளூர், வெளியூர் நலன் விரும்பிகள் பலர் தமது பங்களிப்பை தவறாது வழங்கி வருகின்றனர். அத்துடன் தமது திருமணநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், பெற்றோரின் நினைவு நாள் ஆகியவற்றை முன்னிட்டு இல்லப்பிள்ளைகளுக்கு உணவு, உடை ஆகியவற்றை வழங்குவதற்கு பணம் அனுப்பி வருகின்றனர். இந்த வகையில் இல்ல நிதி பேணப்பட்டு பிள்ளைகளின் சகல முன்னேற்ற நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுகிறது. இல்லத்தை விட்டு விலகி உறவினர் விருப்பப்படி விவாகம் செய்யச் செல்பவர்களுக்கு இருபதாயிரம் ரூபாவிற்கு (20,000/=) மேற்பட்ட தொகையை அன்பளிப்பாக வழங்கி வருகிறோம். உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையாமல் இருக்கும் வயது வந்த பிள்ளைகளுக்கு பல்வேறு இல்லப் பணிகளை பகிர்ந்தளித்து மாதம் தோறும் ஊதியமும் வழங்கி வருகிறோம். இப்பணத்தை அவர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் இட்டு சேமிப்பை மேற்கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

10-03-2007 சனிக்கிழமை வெள்ளிவிழா எடுக்கும் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு எங்கள் உளங்கனிந்த வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிக்கிறோம். மேலும் மேலும் இவ்வில்லம் சகல துறைகளிலும் ஓங்கி மிளிர வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

1. சிட்டினி அபயகரம் - அவுஸ்ரேலியா
2. சைவ சித்தாந்த மன்றம் - கனடா
3. சைவ முன்னேற்ற சங்கம் - U.K
4. ஈழத்தமிழர் மன்றம் - திரு. வை. ஈழலிங்கம்
5. அரச அதிபர் திரு. வேதநாயகன் - கிளிநொச்சி
6. திரு. முருகு இராமலிங்கம் - தமிழ்நாடு
7. வைத்திய கலாநிதி இ. கனகசுந்தரம் - சிங்கப்பூர்
8. திரு. இ. தெய்வேந்திரம் தமிழர் நம்பிக்கை நிதியம் - U.K
9. கவிஞர் வி. கந்தவனம் - கனடா

## தற்போது இல்லப்பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள்

1992ம் ஆண்டு இராணுவ நெருக்கடி காரணமாக கோயில் வளாகத்தில் இருந்து நாங்கள் இடம்பெயர்ந்து சென்ற போது எமக்குப் புக்லிடம் அளித்தது யா/இராமநாதன் கல்லூரி ஆகும். இக் கல்லூரியின் அதிபரும் ஆசிரியர்களும் கோட்டக்கல்வி அதிகாரிகளும் எம்மவரில் எழுபத்தைந்து பேரை மனமுவந்து ஏற்று கல்லூரியில் வதிவிடம் தந்து ஆதரித்தனர். பிள்ளைகள் எல்லோரும் இராமநாதன் கல்லூரியிலேயே கல்வி கற்பதற்கு சேர்க்கப்பட்டனர். நிலைமை சீராகி நாங்கள் தெல்லிப்பழைக்கு வந்த போதும் பிள்ளைகள் இக்கல்லூரியிலேயே தொடர்ந்து கல்வி கற்கின்றனர். மேலும் ஐந்தாம் வகுப்புக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்க ஏற்பாடு செய்து தற்போது எட்டு ஆண்டுகளாக சிறுமிகள் அங்கு கல்வி பயிலுகின்றார்கள். கடந்த ஆண்டு தொடக்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆறாம் வகுப்பு பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். குறிப்பிட்ட மூன்று பாடசாலைகளிலும் இப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் நிறைந்த அக்கறை காட்டி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரிகள்

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை உயர்தரப் பிரிவில் சிறந்த சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்பை நிறைவேற்றிய மூவர் தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தமது கடமைகளை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள். மற்றும் ஒருவர் பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து பட்டம் பெறும் நிலையில் இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இரண்டு பேர் யாழ் பல்கலைக்கழக இறுதி வருடத்தில் கல்வி கற்கின்றனர். மேலும் ஒருவர் கலைப்பிரிவில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமதி சி. தவனேஸ்வரி
செல்வி. வி. வடிவாம்பிகை
செல்வி. சு. சாயரூபி
செல்வி. கே. புஸ்பலட்சுமி
செல்வி. கு. சர்மிளா
செல்வி. ஸ்ரீ. கலைவதனி
செல்வி. மு. கலாநிதி
செல்வி. ம. சுமித்திரா

**ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்கள்**

கடந்த பல ஆண்டுகளாக இல்லத்தில் சேர்க்கப்பட்டு தேவையான பணிகளைப் புரிந்து வரும் பெண் அடியார்கள் :-

1. திருமதி தேவி சிவபாலசிங்கம்
2. அருட்சகோதரி ஐதிஸ்வரி
3. திருமதி சிவாஜினி
4. செல்வி உஷா சுப்பையா
5. திருமதி தவமலர் துரைராஜசிங்கம்
6. செல்வி சுகந்தினி சுப்பையா
7. செல்வி கருணாதேவி அருளம்பலம்
8. திருமதி வே. சுந்தரம்
9. செல்வி எஸ். மீனா
10. செல்வி மங்கயற்கரசி
11. திருமதி சிவமணி

**இல்ல உத்தியோகத்தர்கள்**

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இல்ல அலுவல்களையும் கல்விப் பொறுப்பையும் நன்கு கவனித்து வருபவர் செல்வி காமாட்சி கந்தையா அவர்கள். மாரீசங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பு பல்கலைக்கழகம் வரை சேர்ந்து கல்வி கற்றவர். சைவப் பண்பாடும் ஆசார சீலமும் இன்முகத்துடன் எவரையும் வரவேற்கும் தன்மையும் கொண்ட இவர் கல்வி அறிவில் மேம்பட்ட பெரியார் அமரர் கந்தையா அவர்களுக்கு இரண்டாவது மகளாக பிறந்து வளர்ச்சி கண்டவர் இவர். அம்மையாரின் கண்காணிப்பிலேயே பிள்ளைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**செல்வி செல்வராணி பெரியதம்பி அவர்கள் :-**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்வி வளர்ச்சியிலும் சமூக வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் இல்லத்தில் வந்து சேர்ந்து பிள்ளைகளின் நலனைக் கவனித்து வருகிறார்கள். அவர்களுக்கேற்ற உடைவகை, சுகாதார வசதி, இருப்பிடவசதி ஆகியவற்றை ஒழுங்காகச் செய்து நிறைவேற்றுகிறார். இரவு நேரத்தில் பிள்ளைகள் அனைவருக்கும் பொறுப்பாக இருந்து பணிசெய்கின்றார். அம்மையாரின் பணியினால் மகளிர் இல்லம் மேலும் சிறப்படைகின்றது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

**இல்லப்பிள்ளைகளின் சாதனைகள்**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இப் பிள்ளைகள் ஈட்டித் தந்த சாதனைகளை எழுதுவதற்கு இடமே இல்லை. ஆண்டு தோறும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறும் சாதனையாளர்கள் பலருக்கும் பணப்பரிசும், பொருட்பரிசும் கொடுத்து பாராட்டுவதை யாவரும் அறிவர். இல்லப்பிள்ளைகளில் மூவர் கடந்த காலத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டி கல்வி ஊக்குவிப்பு பணமும் பெற்று வருகின்றனர். அத்துடன் பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி, கோலம் போடுதல், மாலை கட்டுதல், பாவோதல், நாட்டிய நாடகம், இராமநாதன் நிறுவனர் பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வருடாவருடம் பங்கு பற்றி தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், பணப்பரிசில் ஆகியவற்றை எங்கள் இல்லப் பிள்ளைகள் பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. காலத்திற்கு காலம் கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் நடைபெற்ற போட்டிகளில் இவர்கள் வெற்றியீட்டி வருகின்றனர்.

**பத்திரிகை வானொலி வாழ்த்துக்கள்**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மகளிர் இல்லச் செயற்பாடுகள் யாழ் தினக்குரலிலும், கொழும்பு தினக்குரலிலும், கொழும்பு வானொலியிலும், யாழ் வானொலியிலும் வெளிவந்து கொண்டே இருக்கும். பிள்ளைகளின் பாடல்களை யாழ் வானொலி அடிக்கடி ஒலிபரப்பி நிற்பதை யாவரும் அறிவர். ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுவிழாக்களின் போது மேற்காட்டிய நிறுவனங்கள் விழாவில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை அனைவரும் அறியச் செய்து பணிபுரிவதை நாங்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். "ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற தலைப்பில் உதயன் பத்திரிகை பாராட்டி வெளியிட்டது. அத்துடன் "வாழ்வளிப்பு நிலையம்" என்று குறிப்பிட்டு தினகரன் செய்தித்தாள் பாராட்டியது. இவ்வாறு எங்கள் இல்லத்தில் காலத்துக்கு காலம் இடம்பெற்ற பாராட்டுக்களை குறிப்பிடுவது இன்றியமையாதது ஆகும்.

**கோசாலைப் பணி**

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பசுக்களை வளர்த்து பால் எடுக்கும் பணியிலும் பிள்ளைகளின் பாவனைக்கு மிகுதியான பாலைக் காய்ச்சி மோர், தயிர், நெய் எடுக்கும் பணியிலும் இல்லப்பிள்ளைகள் ஈடுபட்டு வருகிறார்கள். ஆண்டு தோறும் காளைகள் உழவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மாதந்தோறும் சுத்தமான நெய் தயாரிக்கப்பட்டு மகளிர் இல்லப் பாவனைக்கும் விற்பனைக்கும் பயன்படுத்தபடுகிறது. கோசாலை மூலம் கூட்டி எடுக்கப்படுகின்ற எரு இல்லத்தின் தோட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு மிகுதி விற்பனை செய்யப்படுகின்றது. இவற்றிற்கு உணவாக வைக்கோல், பனையோலை, தவிடு, பிண்ணாக்கு விலைக்குப் பெறப்படுகின்றது. கோசாலை மண்டபங்கள் மூன்று இடத்தில் அமைக்கப்பட்டு பசுக்கள் பேணப்படுகின்றன.

இந்தப் பணியை ஒரு தெய்வீகப் பணியாகவே நாம் கருதுவோம். இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தங்கியிருந்த பொழுதும் அந்த நேரத்தில் வளர்க்கப்பட்ட பசுக்களையும் கன்றுகளையும் அங்கே ஒரு தொழுவம் அமைத்துப் பராமரித்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. கோசாலைப் பராமரிப்பை திரு. வ. கந்தையா, திரு. வே. பாக்கியமுத்து ஆகிய இருவரும் மேற்கொள்கிறார்கள்.

**நன்றி கூறுகின்றோம்**

✳ மகளிர் இல்லப்பணிகளை கண்காணித்துக் காலந்தோறும் ஆவன செய்யும் யாழ் அரசாங்க அதிபர் அவர்கள்.

✳ இல்லம் அருங்கில் பெருந்தெரு வீதியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வலிவடக்கு பிரதேச செயலர், மற்றும் உத்தியோகத்தர்கள்.

✳ முட்டின்றிப் பாவனைப் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் வழங்கிக்கொண்டிருக்கும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்.

✳ நோய்வாய்பட்ட காலத்தில் தகுந்த சிகிச்சை அளித்து இல்லப் பிள்ளைகளைப் பேணும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும் உத்தியோகத்ததர்களும்.

✳ நிதி நிலைமையில் முட்டின்றி செலவு செய்ய உதவும் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள், அறக்கட்டளைகள் நிறுவியோர்

✳ தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்கள்.

✳ வெள்ளி விழா மலருக்கு செய்திகளும் வாழ்த்துக்களும் வழங்கிய நிறுவனங்கள்.

✳ மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளிவரச் செய்த திருமகள் அழுத்தகத்தினர்.

✳ எழுத்துப்பிழை, சொற்பிழை, கருத்துப்பிழை தோன்றாது ஒப்பு நோக்குதல் பணியைச் செய்து சிறந்த முறையில் வெளிவரச் செய்த திரு. கா. சிவபாலன் அவர்கள்.

**செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P**
தலைவர்

**திரு. நா. தவநாதன்**
**திரு. ஆறு. திருமுருகன்**
செயலாளர்

**திரு. அ. சண்முகநாதன்**
**திரு. சு. ஏழுர்நாயகம்**
பொருளாளர்



சிவத்தமிழ்ச்
செல்வி
அம்மா
அவர்களுடன்
யாழ். பல்கலைக்
கழகத்துக்கு
தெரிவானோர்.



மகளிர்
இல்ல
உத்தியோகத்தர்கள்.

உ
அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## மாணவர் பரிசு விபரம்

| | |
|---|---|
| **செல்வி கே. புஸ்பலட்சுமி** | யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் இசைத்துறையில் பட்டப் படிப்பை முடித்து விட்டு வெளியேறுகிறார், வட இலங்கை சங்கீதசபை ஆசிரியர் தரத்திற்கு 2007ல் தோற்றுகிறார். |
| **செல்வி மு. கலாநிதி** | யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடம் இசைத்துறை 4ம் வருடம், ஆங்கிலம் உட்பட சகல பாடங்களிலும் தடங்கல் இன்றி சித்தியடைந்து வருகிறார், இணுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்திய ஆங்கிலக் கற்கை நெறியில் சிறப்புச் சான்றிதழ் பெற்றமை. |
| **செல்வி ம. சுமித்திரா** | யாழ் பல்கலைக்கழக கலைப்பீடம் 2ம் வருடம், ஆண்டு 5ல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியவர், க.பொ.த உ/த பரீட்சையில் 2A , B பெற்று பல்கலைக்கழகத்தில் மகாபொல புலமைப் பரிசில் பெற்று வருகிறார், இணுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்திய ஆங்கிலக் கற்கை நெறியில் சிறப்புச் சான்றிதழ் பெற்றமை. |
| **செல்வி நா. கிருபாலினி** | க.பொ.த உ/த பரீட்சையில் A 2B பெற்று பெற்று கோப்பாய் கல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார், அறநெறிப் பாடசாலை, அச்சகம் ஆகிய துறைகளில் திறமையாக பணியாற்றுகிறார். கணனிக் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ளார். |
| **செல்வி கு. பத்மலோஜினி** | மட்டக்களப்பு விபுலானந்த நுண்கலைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். |

| | |
|---|---|
| **செல்வி வி. ஜலஜா** | தமிழ்த்தின இலக்கணப் போட்டி கோட்ட மட்டம் 1ம் இடம், வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் தினப் போட்டி கட்டுரை 1ம் இடம், சைவ பரிபாலனசபை பரீட்சை A சித்தி, தமிழ்மன்றம் நடாத்திய கவிதைப் போட்டி 2ம் இடம், நவராத்திரி விழா பண்ணிசைப்போட்டி கோட்ட மட்டம் 3ம் இடம், |
| **செல்வி து. துஸ்யந்தினி** | பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் நடாத்திய பண்ணிசைப் போட்டி அதிமேற் பிரிவில் 1ம் இடம் தங்கப்பதக்கம், அறநெறிப் பாடசாலையில் பண்ணிசை கற்பிக்கிறார், இல்லப் பிள்ளைகளுக்கு ஆடல், பாடல் சொல்லிக் கொடுப்பவர். |
| **செல்வி ஜெ. தேவரூபி** | பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் நடாத்திய பண்ணிசைப் போட்டி மத்திய பிரிவில் 2ம் இடம் வெள்ளிப்பதக்கம், தமிழ்த்தினப் போட்டி பாவோதல் கோட்ட மட்டம் 1ம் இடம், வலய மட்டம் 3ம் இடம், குழு இசை 3ம் இடம், அழகெழல் போட்டி குழு இசை 1ம் இடம், நவராத்திரி விழா பண்ணிசைப் போட்டி 1ம் இடம். |
| **செல்வி க. செல்வதி** | அழகெழல் போட்டி குழு இசை 1ம் இடம், தமிழ்த்தினப் போட்டி தனி இசை கோட்ட மட்டம் 1ம் இடம், குழு இசை 3ம் இடம், நவராத்திரி விழா பண்ணிசை 3ம் இடம். |
| **செல்வி சி. சிவரூபி** | தமிழ்த்தினப் போட்டி தனி இசை கோட்ட மட்டம் 3ம் இடம், தமிழ்த்தினப் போட்டி சைவ பரிபாலனசபை பரீட்சை A சித்தி, பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் நடாத்திய பண்ணிசைப் போட்டி 3ம் இடம். |
| **செல்வி அ. ஜெயந்தினி** | அழகெழல் போட்டி சித்திரம் பாராட்டுச் சான்றிதழ், சித்திரப்போட்டி பாடசாலை மட்டம் 1ம் இடம். |
| **செல்வி வா. வினோதா** | விவேகானந்தசபை பரீட்சை சமயம் A சித்தி, சைவ பரிபாலனசபை பரீட்சை சமயம் 9ம் ஆண்டு B சித்தி, வலைப்பந்தாட்டம் கோட்டமட்டம் 1ம் இடம். |



சிவத்தமிழ்ச் செல்வி
அம்மா
அவர்களுடன்
யா/தெல்லிப்பழை
யூனியன் கல்லூரி
மாணவர்கள்



சிவத்தமிழ்ச் செல்வி
அவர்களுடன்
புலமைப்பரிசில்
மேலும் சிறப்புப்
பரிசில்கள்
பெற்ற
செல்வி. வி.
ஜலயா அவர்கள்.

| | |
|---|---|
| செல்வி சி. கீதா | பொதுவிவேகம் |
| செல்வி யோ. தனுஜா | பொதுத்திறன் |
| செல்வி செ. நிஷாந்தினி | பந்து பரிமாறல் 1ம் இடம், ஆங்கிலச் சொல்லாக்கம் 3ம் இடம், பொது விவேகம். |
| செல்வி க. கரிஷாலினி | ஆறுதல் பரிசு |
| செல்வி மா. தனுஷியா | பொதுத்திறன் |
| செல்வி ச. சாருஜா | தடைதாண்டல் 3ம் இடம், பொது விவேகம். |
| செல்வி யோ. விநுஜா | நீர் குடித்து ஓடல் 2ம் இடம், தாராநடை 3ம் இடம். |
| செல்வி க. கஜலி | பொதுவிவேகம் |
| செல்வி சி. கீர்த்தனா | பொதுத்திறன் |
| செல்வி யோ. அமுதினி | ஆறுதல் பரிசு |
| செல்வி மா. தனுஜா | ஆறுதல் பரிசு |
| செல்வி வா. வாஸந்தி | ஆறுதல் பரிசு |
| செல்வி யோ. சுலக்ஷனா | ஆறுதல் பரிசு |
| செல்வி வி. பிரசா | 5ம் ஆண்டு புலமைப்பரிசில் 100 புள்ளிகளைப் பெற்று பாராட்டுப் பெற்றவர். |
| செல்வி இ. வளர்மதி | ஆறுதல் பரிசு |
| செல்வி தே. தேவரூபி | ஆறுதல் பரிசு |
| செல்வி க. கஜிதா | ஆறுதல் பரிசு |
| செல்வி ஜெ. மனோரஞ்ஜி | சைவபரிபாலன சபை A சித்தி |
| செல்வி இ. மதிவதனி | சைவபரிபாலன சபை A சித்தி |
| செல்வி க. கஜானி | ஆறுதல் பரிசு |
| செல்வி ஜெ. நாகசுஜித்தா | ஆறுதல் பரிசு |
| செல்வி ம. ஜீவநந்தினி | ஆறுதல் பரிசு |
| செல்வி சி. யசோதினி | நவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பண்ணிசைப் போட்டி 2ம் இடம், சைவபரிபாலன சபை A சித்தி |

| | |
|---|---|
| செல்வி பா. விதுஷாயினி | தமிழ்த்தினப் போட்டி குழு இசை 3ம் இடம், சைவபரிபாலன சபை A சித்தி. |
| செல்வி ஜெ. அகிலா | தமிழ்த்தினப் போட்டி குழு இசை 3ம் இடம், |
| செல்வி க. ஜெசனி | தமிழ்த்தினப் போட்டி குழு இசை 3ம் இடம், |
| செல்வி யே. மேரிமெற்றில்டா | சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. |
| செல்வி சி. தர்சினி | சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. |
| செல்வி நா. சர்வலோஜினி | சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. விவேகானந்த சபை பரீட்சை சமயம் A சித்தி |
| செல்வி யே. மேரிதர்சினி | அறநெறிப் பாடசாலையில் கற்பிக்கிறார், சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. |
| செல்வி யோ. புஸ்பவதனி | சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. |
| செல்வி த. தர்சிகா | சைவபரிபாலன சபை பரீட்சை சமயம் A சித்தி. |
| செல்வி நா. சிவமாலினி | ஆறுதல் பரிசு, பொதுப்பணி. |
| செல்வி த. சிந்துஜா | ஆறுதல் பரிசு, பொதுப்பணி. |
| செல்வி செ. தமிழ்விழி | 2A, 2B, 4C, S O/L சித்தி, A/L படிக்கிறார். |
| செல்வி ஜெ. அமிலா | O/L சித்தி, A/L படிக்கிறார். |
| செல்வி இ. சிவப்பிரியா | ஆறுதல் பரிசு, |
| செல்வி ஜெ. ஜெனித்தா | நூலகத்தில் சிறப்பான பணி |
| செல்வி மு. பூமலர் | பொதுப்பணி. |
| திருமதி உ. நாகராணி | அச்சகப்பணி |



துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் இடம் பெறும்
பிள்ளைகள் (2007)



சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத்தில்
சிவத்தமிழ்ச் செல்வி
அம்மாவுடன்வதியும்அன்னையர்கள்.

## 2007ம் ஆண்டு

## துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் இடம் பெறுவோர்

# <u>பெயர் விபரம்</u>

1. செல்வி கே. புஸ்பலட்சுமி
2. செல்வி மு. கலாநிதி
3. செல்வி ம. சுமித்திரா
4. செல்வி நா. கிருபாலினி
5. செல்வி கு. பத்மலோஜினி
6. செல்வி செ. ஜெனித்தா
7. செல்வி து. துஸ்யந்தினி
8. செல்வி இ சிவப்பிரியா
9. செல்வி செ. தமிழ்விழி
10. செல்வி ஜெ. அமிலா
11. செல்வி யே. மேரிதர்சினி
12. செல்வி நா. சிவமாலினி
13. செல்வி யோ. புஸ்பவதனி
14. செல்வி த. சிந்துஜா
15. செல்வி வி. ஜலஜா
16. செல்வி நா. சர்வலோஜினி
17. செல்வி அ. ஜெயந்தி
18. செல்வி சி. தர்சினி
19. செல்வி த. தர்சிகா
20. செல்வி வா. வினோதா
21. செல்வி யே. மேரிமெற்றில்டா
22. செல்வி சி. யசோதினி
23. செல்வி பா. விதுஷாயினி
24. செல்வி ஜெ. அகிலா


25. செல்வி க. ஜெசனி
26. செல்வி ஜெ. தேவரூபி
27. செல்வி சி. சிவரூபி
28. செல்வி ஜெ. மனோறஞ்சி
29. செல்வி இ. மதிவதனி
30. செல்வி க. கயானி
31. செல்வி ஜெ. நாகசுஜித்தா
32. செல்வி ம. ஜீவநந்தினி
33. செல்வி க. செல்வதி
34. செல்வி ச. தனுஷியா
35. செல்வி தே. தேவரூபி
36. செல்வி க. கஜிதா
37. செல்வி வி. பிரசா
38. செல்வி இ. வளர்மதி
39. செல்வி யோ. அமுதினி
40. செல்வி மா. தனுஜா
41. செல்வி வா. வாசந்தி
42. செல்வி யோ. சுலக்ஷனா
43. செல்வி க. கஜலி
44. செல்வி சி. கீர்த்தனா
45. செல்வி யோ. விஜுஜா
46. செல்வி ச. சாருஜா
47. செல்வி செ. நிஷாந்தினி
48. செல்வி க. கரிசாலினி
49. செல்வி மா. தனுஷியா
50. செல்வி யோ. தனுஜா
51. செல்வி சி. கீதா
52. செல்வி மு.பூமலர்

# சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்

1. செல்வி கருணாதேவி அருளம்பலம்
2. செல்வி த. மங்கயற்கரசி
3. திருமதி வே. சுந்தரம்
4. திருமதி இ. சிவமணி
5. திருமதி தவமலர் துரைராஜசிங்கம்
6. திருமதி தேவி சிவபாலசிங்கம்
7. செல்வி எஸ். மீனா
8. செல்வி க. இராசலட்சுமி
10. செல்வி உஷா சுப்பையா
11. அருட்சகோதரி ஜதீஸ்வரி
12. புலவர் சி. விசாலாட்சி (மாதாஜி)

# இல்லப் பணியாளர் விபரம்

| | |
|---|---|
| திரு கா. சிவபாலன் | - பிரதம லிகிதர் |
| செல்வி ச. ரேவதி | - உதவி லிகிதர் |
| திருமதி உ. மஞ்சுளா | - உதவி லிகிதர் |
| செல்வி கா. கந்தையா | - இல்ல மேற்பார்வையாளர் |
| செல்வி செ. பெரியதம்பி | - இல்ல மேற்பார்வையாளர் |
| செல்வி சு. சுகந்தினி | - உதவி மேற்பார்வையாளர் |
| திருமதி உ. நாகராணி | - திருமகள் அழுத்தகப் பணியாளர் |






துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின்
அழகுத் தோற்றம்